Australian Government
Department of Home Affairs

# நுகர்வோர் ழிகாட்டி - பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்கள்

ஒரு பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவராக (registered migration agent), ஒரு ஆஸ்திரேலிய சட்டத் தொழில் வல்லுநராக அல்லது ஒரு விலக்கு அளிக்கப்பட்ட நபராக ஒருவர் இல்லாத பட்சத்தில், அவர் ஆஸ்திரேலியாவில் குடிவரவு உதவியை வழங்குவது சட்டவிரோதமானது. ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக குடிவரவு உதவியை வழங்கும் எந்தவொரு நபரின் மீதும், Department of Home Affairs-ன் இணையதளத்திலுள்ள Border Watch Online Report-ன் ஊடாக புகாரளிக்கப்பட வேண்டும். உங்கள் குடிவரவு விடயத்தில் உதவி செய்யும் எந்தவொரு நபராலும் உங்களுக்கு விசா கிடைப்பதற்கான உத்தரவாதத்தை அளிக்க முடியாது என்பதை அறிந்துகொள்வது முக்கியம்.

---

## பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்கள் (Registered Migration Agents)

பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்கள், தொழில்முறைத் தரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும், நடத்தை விதிகளைப் பின்பற்ற வேண்டும் மற்றும் புலம்பெயர்வுச் சட்டம் மற்றும் செயல்முறை குறித்த புதுப்பிக்கப்பட்ட அறிவைப் பேணவேண்டும்.

அனைத்து பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்களுக்கும் னித்துவமான Migration Agents Registration Number (MARN) என்ற எண் உள்ளது. OMARA வலைத்தளமான www.mara.gov.au-இல் ஒரு நபர் பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பதை நீங்கள் சரிபார்க்கலாம்.

**The Office of the Migration Agents Registration Authority (OMARA)** என்பது Department of Home Affairs-ன் ஒரு பகுதியாகும், அத்துடன் இது ஆஸ்திரேலியாவில் பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்களுக்கான (registered migration agents) ஒழுங்குமுறையைப் பேணும் அமைப்பாகும். பின்வருபவற்றை OMARA செய்கிறது:

- ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்வு முகவராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து தீர்மானிக்கிறது
- பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்களின் நடத்தைகளைக் கண்காணிக்கிறது, புகார்களை விசாரிக்கிறது, மற்றும் தேவைப்பட்டால் ஒழுங்கு நடவடிக்கையை எடுக்கிறது.

ஒரு விசா அல்லது ஸ்பான்சர்ஷிப் விண்ணப்பம் தொடர்பாகவோ, அல்லது உங்களது கட்டணத்தைத் திருப்பிச் செலுத்துமாறு பதிவுசெய்யப்பட்ட ஒரு புலம்பெயர்வு முகவருக்கு உத்தரவிடவோ OMARA-ஆல் உங்களுக்கு உதவ முடியாது.

## நடத்தை விதி

பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்களுக்கான நடத்தை விதிமுறையானது அவர்களைப் பின்வருமாறு நடந்துகொள்ள வேண்டுகிறது:

- விசா பெறுவதற்கான உங்களது வாய்ப்புகள் குறித்து நேர்மையாக இருத்தல்
- சரியான ஆலோசனையை வழங்குதல், அத்துடன் உங்கள் விண்ணப்பத்தின் முன்னேற்றம் மற்றும் அதைப் பாதிக்கக்கூடிய மாற்றங்கள் பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்துதல்
- சட்டத்திற்கும் உங்கள் நலன்களுக்கும் உட்பட்டு செயற்படுதல் மற்றும் உங்கள் தனியுரிமையைப் பாதுகாத்தல்
- உங்கள் நோக்கங்களுடன் முரண்படும் நோக்கம் அவர்களுக்கு இருந்தால் அதை உங்களுக்குத் தெரியப்படுத்துதல் மற்றும் உரிய நடவடிக்கை எடுத்தல்
- வழங்கப்படவிருக்கும் சேவைகள், மதிப்பிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் பிற செலவுகள் குறித்த ஒரு எழுத்துப்பூர்வமான அறிக்கையை வேலையைத் தொடங்குவதற்கு முன்னரே உங்களுக்கு வழங்குதல்
- நீங்கள் முன்கூட்டியே பணம் செலுத்தினால், நிதிகளை ஒரு தனி வங்கிக் கணக்கில் வைத்திருத்தல்
- உண்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட சேவைகள் மற்றும் செலுத்தப்படவேண்டிய தொகை ஆகியவற்றைப் பட்டியலிடும் ஒரு விலைப்பட்டியலை உங்களுக்குக் கொடுத்தல்
- உங்கள் விண்ணப்பத்தின் செயலாக்கம் தொடர்பான சரியான பதிவுகளை வைத்திருத்தல்.

முழுமையான Code of Conduct (நடத்தை விதி) OMARA இணையதளத்தில் கிடைக்கிறது.

## பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்கள் பற்றிய ஆதங்கங்கள்

உங்கள் பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவருடன் உங்களுக்கு ஒரு பிரச்சினை இருந்தால், முதலில் அதை அவர்களுடன் பேசித்தீர்க்க முயற்சியுங்கள். உங்கள் முகவருடன் இந்த விடயத்தைத் தீர்க்க முடியாவிட்டால் மற்றும் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், OMARA-ஐ நீங்கள் தொடர்பு கொள்ளலாம். OMARA இணையதளத்தில் உள்ள complaint form-ஐப் பூர்த்தி செய்வதன் மூலம், உங்கள் பதிவு செய்யப்பட்ட குடிபெயர்வு முகவர் குறித்து புகார் அளிக்கலாம்.

புகார் ஒன்றை அளிப்பது, உங்கள் தற்போதைய விசா விண்ணப்பத்தைப் பாதிக்காது, அல்லது முந்தைய விசா மறுப்பு அல்லது இரத்து குறித் முடிவை மாற்றாது.

## ஆஸ்திரேலிய சட்டத் தொழில் வல்லுநர்கள் மற்றும் விலக்கு அளிக்கப்பட்ட நபர்கள்

ஆஸ்திரேலிய சட்டத் தொழில் வல்லுநர்கள் மற்றும் விலக்கு அளிக்கப்பட்ட நபர்கள் போன்ற சிலர், ஆஸ்திரேலியாவில் குடிபெயர்வு உதவிகளை வழங்க புலம்பெயர்வு முகவராகப் பதிவு செய்ய வேண்டியதில்லை.

ஆஸ்திரேலிய சட்டத் தொழில் வல்லுநர்கள், தங்களது தொடர்புடைய சட்ட அதிகாரத்தின் தொழில்முறை நடத்தை விதிகளின்படி செயற்பட வேண்டும். ஒரு சட்டத் தொழில் வல்லுநரைப் பற்றி நீங்கள் புகார் அளிக்க விரும்பினால், Department of Home Affairs website-ல் கிடைக்கும் ‘Consumer guide – legal practitioners’-ஐப் படிக்கவும்.

விலக்கு அளிக்கப்பட்ட நபர்களில் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஸ்பான்சர் செய்யும் நபர்களும் அடங்குகின்றனர். விலக்கு அளிக்கப்பட்ட நபர்களின் ஒரு முழுப் பட்டியலை *Form 956 – Appointment of a registered migration agent, legal practitioner or exempt person*-ல் காணலாம். விலக்கு அளிக்கப்பட்ட நபர்களால் குடிவரவு உதவியை வழங்க கட்டணம் வசூலிக்க முடியாது.

## ஒரு சந்திப்பு ஏற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல்

நீங்கள் ஒரு சந்திப்பு ஏற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினால், *Form 956*-ஐப் பூர்த்தி செய்யவும்.

## மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை

மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை ஊடாக ஒரு உரைபெயர்ப்பாளருடன் பேசுங்கள் (TIS National)
www.tisnational.gov.au ☎ 131 450

ஜூலை 2021